1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் அப்படியே தொடர்ந்து இருக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பதில்கள் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வழக்கம் எப்போதும் கிடையாது.

(5) அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாத காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையைத் தொடர்ந்து நடத்திக் கொடுத்து இன்று இந்த அவை முடிய இருக்கிறது. அவர்கள் மன நிம்மதியோடும் நிறைவோடும் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

''பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால் பேரவை இன்றிலிருந்து மீண்டும் கூடும்'' பேரவை விதியில் 16 (1) இன்படி நாள் குறிப்பிடப்பெறாது ஒத்திவைக்கப் பெறவேண்டும்'' என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிந்து பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை 1-48 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

156. 1978 ஜூலை 25-ஆம் நாளுக்கும் 28-ஆம் நாளுக்கும் இடையே விழுப்புரத்தில் நடந்த கலவரங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. ஆர். சதாசிவம் விசாரணைக் கமிஷனின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ்).]